தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **1** | **30** | | | |
| **2** | **10** | | | |
| **3** | **10** | | | |
| **4** | **10** | | | |
| **5** | **10** | | | |
| **6** | **10** | | | |
| **7** | **05** | | | |
| **8** | **15** | | | |
| மொத்தப் புள்ளிகள் | **100** | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. மெய் எழுத்துகள் ________________ .

( 216, 12, 18 )

2. மாமல்லன் என அழைக்கப்பட்டவன் ________________ .

( நரசிம்மபல்லவன், செங்குட்டுவன், அருண்மொழித்தேவன்)

3. ஒலிம்பிக் கொடியில் ________________ வளையங்கள் காணப்படுகின்றன.

( நான்கு, ஆறு, ஐந்து )

4. அருவி ________________ இருந்து வீழ்கின்றது.

( மலையில், மளையில், மழையில் )

5. ஆனிரை மேய்த்தல் ________________ நிலத்துக்குரிய தொழில்.

( குறிஞ்சி, முல்லை, நெய்தல்)

6. **குறள்:**

கொல்லான் புலாலை ________________ க் கைகூப்பி

யெல்லா வுயிருந் தொழும்

( வெறுத்தானை, பொறுத்தானை , மறுத்தானை )

7. வாள் + போர் என்பதைச் சேர்த்து எழுதினால் ________________ .

( வாட்போர், வாள்போர், வாள்ப்போர் )

8. நாடுபடு செல்வங்களில் ஒன்று ________________ .
( மயிற்பீலி, ஆனைந்து, தேன் )

9. **பழமொழி:**

துறவிக்கு வேந்தன் ________________ .

( இரும்பு, கரும்பு, துரும்பு )

10. ________________ நன்றாகப் படித்தால் தேர்வில் தேர்ச்சியடைவாய்.

( நீ, நான், அவன் )

11. மன்னார் ________________ வணிகத்துறையில் புகழ்பெற்று விளங்கியது.

( இரும்பு, முத்து, செம்பு )

12. ஆறலைத்தல் என்பது ________________ .
( மாறுபடுதல், அசையாது நிற்றல், வழிப்பறிசெய்தல் )

13. மன்னார்ப்பட்டினம் ________________ கொண்டு விளங்கியது.
( பேரும்புகழும், அல்லும்பகலும், ஊண்உறக்கம் )

14. சிலப்பதிகாரத்தை எழுதியவர் ________________ .

( ஔவையார், இளங்கோவடிகள், திருவள்ளுவர் )

15. கூத்து, நட்டம், நடம் என அழைக்கப்பட்ட கலை ________________ .

( இசைக்கலை, ஆடற்கலை, ஓவியக்கலை )



TEDC

16. ஆறுமுகநாவலர் ________________ நூற்றாண்டில் வாழ்ந்தார்.

( 20 ஆம் , 19 ஆம், 18ஆம் )

17. தமிழர் சுவைகளை ________________ வகுத்தனர்.

( ஏழாக, நான்காக, ஆறாக )

18. ஔவையாரால் மூதுரை ________________ .

( எழுதப்பட்டது, எழுதப்படும், எழுதப்படுகிறது )

19. ________________ கொடி புலிக்கொடி ஆகும்.

( சேரரது, சோழரது, பாண்டியரது )

20. மலையும் மலை சார்ந்த இடமும் ________________ .

( குறிஞ்சி, முல்லை, மருதம் )

21. அம்மா பூக்களைக் ________________ மாலை கட்டினார்.

( கொய்து , பறித்து , தொடுத்து )

22. தமிழர் வீரத்தோடு தொடர்புடைய மரம் ________________ .

( முதிரை, வாகை, பாலை )

23. விளையாட்டுகள் உடல் வலுப்பெற ________________ .

( உதவுகின்றது, உதவுகின்றார்கள், உதவுகின்றன )



TEDC

24. தமிழரின் பண்பாட்டைக் கூறும் நூல் ________________ .

( சிலப்பதிகாரம், புறநானூறு, அழகின்சிரிப்பு )

25. கதிரவன் ________________ த் திசையில் காலிப்பான்.

( வடக்கு, கிழக்கு, மேற்கு )

26. பறவைகள் ________________ ப் பறந்தன .

( கண்ணுங்கருத்துமாக , சாரிசாரியாக , கூட்டங்கூட்டமாக )

27. நரி ஊளையிடும். அது போல புலி ________________ .

( பிளிறும், முழங்கும், உறுமும் )

28. தைத்திருநாளின் மறுபெயர் ________________ .

( உழவர்திருநாள், ஆடிப்பிறப்பு, மாட்டுப்பொங்கல் )

29. ''ஆற்றங்கரையில் மரமும் அரசு அறிய''எனும் பாடல் இடம் பெற்ற நூல் ________________ .

( நாலடியார், நல்வழி, மூதுரை )

30. தமிழரின் வீர விளையாட்டுகளில் ஒன்று ________________ .

( காற்பந்தாட்டம், கிளித்தட்டு, ஏறுதழுவுதல் )

புள்ளிகள் 30

**2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. கதிரவனால் ________________ மழை கிடைக்கிறது.

   ( பயிர்கள் )

2. ஔவையார் சிறுவர்களுக்குப் பல ________________ எழுதினார்.

   ( பாடல்கள் )

3. அப்பா மரத்தை ________________ வெட்டினார்.

   ( வாள் )

4. தம்பி ________________ வயலுக்குச் சென்றான்.

   ( அம்மா )

5. ________________ சேர்ந்த புல்லும் பயன் பெறும்.

   ( நெல் )

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ஊர் மக்களுக்காக ஆடப்படும் ஆடற்கலை எது?

2. தமிழ்நாட்டில் பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன?

3. மாட்டுப்பொங்கல் எப்போது கொண்டாடப்படும்?

4. ஊட்டச்சத்துகள் இரண்டு தருக.

5. இளங்கோவடிகள் எந்த நாட்டின் இளவரசர்?

6. பழந்தமிழர் சிறந்து விளங்கிய கலைகள் இரண்டு தருக.

7. யாருடைய நட்பு நமக்குத் துன்பம் தரும்?

புள்ளிகள் 10

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து; கவிதையை முழுமையாக்குக.**

## மழை

| | | |
|---|---|---|
| முழங்கி | இரைந்தது | வானம் |
| நீரும் | பொழிந்தது | |

கரிய முகில்கள் திரண்டன

கறுத்து ________________ இருண்டது

குளிர்ந்த காற்றும் எழுந்தது

கூ.....கூ என்றே ________________

மின்னல் வானில் தெரிந்தது

முகில் ________________ இடித்தது

மழையும் நன்கு ________________

மண்ணில் ________________ வழிந்தது

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| மரங்களும் | காடு | உயிரினங்கள் |

| | |
|---|---|
| அழியாது | தூயகாற்று |

இயற்கை கொடுத்த கொடைகளில் ஒன்று ________________ .

இதுவே மாந்தனின் முதல் இருப்பிடமாகும். இங்கு ________________

அடர்ந்த செடி கொடிகளும் நிறைந்துள்ளன. காடுகளில்

ஆறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இங்கு ________________

வீசுகின்றது. காடுகளில் பறவைகள், விலங்குகள் போன்ற பல

________________ வாழ்கின்றன. எனவே, நாம் காடுகளை

________________ காக்க வேண்டும்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**இராவணன் ஒரு தமிழ் மன்னன். அவன் ஒரு சிறந்த வீரன். இராவணன் இலங்கையைத் தலைநகரமாகக் கொண்டு தமிழகம் முழுவதையும் ஆண்டான். அவனுடைய தந்தையின் பெயர் வச்சிரவாவு. தாயின் பெயர் கேகசி. அவன் வீணை மீட்டுவதில் வல்லவன். இராவணன் திருகோணமலையில் ஏழு வெந்நீர்க்கிணறுகளைக் கட்டுவித்தான் என்று வரலாறு கூறுகின்றது.**

1. இராவணன் எப்படிப்பட்டவன்?

_______________________________________________

2. தமிழகம் முழுவதையும் ஆண்ட மன்னன் யார்?

_______________________________________________

3. இராவணனின் தந்தையின் பெயர் என்ன?

_______________________________________________

4. இராவணன் எதில் வல்லவன்?

_______________________________________________

5. இராவணன் திருகோணமலையில் எவற்றைக் கட்டுவித்தான்?

_______________________________________________

புள்ளிகள் 10

**7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. நேற்று நல்ல ________________ பெய்தது.
   ( மழை, மலை )

2. தாமரை ________________ க் கண்டு மலரும்.
   ( கதிறவனை, கதிரவனை )

3. ஆடற் ________________ மனத்துக்கு இன்பம் தரும்.
   ( களை, கலை )

4. இன்று நான் ________________ ச் செல்லவில்லை.
   ( பள்ளிக்கு, பல்லிக்கு )

5. அழகான பூக்களைக் கண்டு ________________ மகிழ்ந்தது.
   ( மனம், மணம், )

புள்ளிகள் 05

8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- ✸ தைத்திருநாள்
- ✸ வளங்கொழிக்கும் மன்னார்
- ✸ விளையாட்டுகள்
  - ➢ விளையாட்டுகள் பற்றி.....
  - ➢ தமிழர்களின் வீரவிளையாட்டுகள், சிறப்புகள்
  - ➢ விளையாட்டுகளினால் ஏற்படும் நன்மைகள்
  - ➢ நீர் விரும்பும் விளையாட்டு எது? ஏன்?

புள்ளிகள் 15



TEDC